# ஆகஸ்ட்– 11 – சனி

**புனித கிளாரம்மான்**

**“நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்கமுடியும்” (மத்.17:17)**

## முதல் வாசகம் : அபாக்குக்1 : 12 – 24

ஆண்டவரே, என்கடவுளே, என்தூயவரே தொன்றுதொட்டே இருப்பவர் நீர் அல்லவா? நீர் சாவைக் காண்பதில்லை. ஆண்டவரே, அவர்களை எங்கள் தண்டனைத் தீர்ப்பாய் ஏற்படுத்தியவர் நீரே. புகலிடமே, எங்களைச் சாடும் சாட்டையாய் அவர்களை ஆக்கியவரும் நீரே.தீமையைக்காண நாணும் தூய கண்களை உடையவரே, கொடுமையைப் பார்க்கத் தாங்காதவதே, கயவர்களை நீர் ஏன் பார்த்துக்கொண்டே இருக்கிறீர்? பொல்லாதவர் தம்மைவிட நேர்மையாளரை விழுங்கும்போது நீர் ஏன் மௌனமாய் இருக்கின்றீர்?நீர் மானிடரைக் கடல் மீன்கள் போலும் தலைமை இல்லா ஊர்வனபோலும் நடத்துகின்றீர்.கல்தேய இனத்தார் மற்றெல்லாரையும் தூண்டிலால் பிடிக்கின்றார்கள் வலையால் வாரி இழுக்கின்றார்கள் தங்கள் பறியிலே சேர்த்துக்கொண்டு அகமகிழ்ந்து களிப்புறுகின்றார்கள்.ஆதலால், தங்கள் வலைக்குப் பலி செலுத்துகின்றார்கள் பறிக்குத் தூபம் காட்டுகின்றார்கள் ஏனெனில் அவற்றாலேயே இன்பமான வாழ்வை அடைகின்றார்கள் அறுசுவை உணவைப் பெறுகின்றார்கள். அப்படியானால் அவர்கள் தங்கள் வலையில் இருப்பவற்றை ஓயாமல் வெளியே கொட்டி மக்களினங்களை இரக்கமின்றி இடைவிடாமல் கொன்று குவிக்கவும் வேண்டுமோ?. நான் காவல் மாடத்தில் நிற்பேன் கோட்டைமேல் நின்று காவல் புரிவேன் என் வாயிலாக ஆண்டவர் என்ன கூறப்போகின்றார் என்றும் என் முறையீட்டுக்கு என்ன விடையளிப்பார் என்றும் கண்டறிவதற்காகக் காத்திருப்பேன்.ஆண்டவர் எனக்கு அளித்த மறமொழி இதுவே: ”காட்சியை எழுதிவை் விரைவாய் ஓடுகிறவனும் படிக்கும் வண்ணம் பலகைகளில் தெளிவாய் எழுது.குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காகக் காட்சி இன்னும் காத்திருக்கின்றது முடிவை நோக்கி விரைந்து செல்கின்றது. ஒருக்காலும் பொய்க்காது. அது காலந்தாழ்த்தி வருவதாகத் தோன்றினால், எதிர்பார்த்துக் காத்திரு் அது நிறைவேறியே தீரும் காலம் தாழ்த்தாது.இதை நம்பாதவரோ உள்ளத்திலே நேர்மையற்றவராய் இருப்பர் நேர்மையுடையவரோ தம் நம்பிக்கையினால் வாழ்வடைவர்.

**பதில்பாடல் :** உம்மை நாடி வருவோரை ஆண்டவரே நீர் கைவிடுவதில்லை.

## நற்செய்தி : மத்தேயு 17 : 14 - 20

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் மக்கள் கூட்டத்தினரிடம் வந்தபோது ஒருவர் அவரை அணுகி அவர் முன் முழந்தாள் படியிட்டு,”ஐயா, என் மகனுக்கு இரங்கும் அவன் வலிப்பு நோயால் பெரிதும் துன்புறுகிறான். அடிக்கடி தீயிலும் தண்ணீரிலும் விழுகிறான்.உம் சீடர்களிடம் அவனைக் கொண்டுவந்தேன் அவனைக் குணமாக்க அவர்களால் முடியவில்லை” என்றார்.அதற்கு இயேசு, ”நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே, எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்க இயலும்? எவ்வளவு காலம் நான் உங்களைப் பொறுத்துக் கொள்ள இயலும்? அவனை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள்” என்றுகூறினார்.கொண்டுவந்ததும் இயேசு அப்பேயைக் கடிந்துகொள்ளவே, அது அவனைவிட்டு வெளியேறியது. அந்நேரமே சிறுவன் குணமடைந்தான்.பின்பு சீடர்கள் தனிமையாக இயேசுவை அணுகி வந்து, ”அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை?” என்று கேட்டார்கள்.இயேசு அவர்களைப் பார்த்து, ”உங்கள் நம்பிக்கைக் குறைவுதான் காரணம். உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து” இங்கிருந்து பெயர்ந்து அங்குப் போ” எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார்.

**தியானம்:** விசுவாசமே நம் சுவாசமாகவும், இறைநம்பிக்கையே நம் வாழ்வாகவும் இருக்கவேண்டும் என்பது இன்றைய வார்த்தைப்பகுதியின் கருப்பொருளாக நமக்குத் தரப்பட்டுள்ளது. இறை நம்பிக்கை என்றால் எந்த ஒரு சந்தோசத்திற்கும், கவலைக்கும் இடம் கொடாமல் எம்மை முழுவதும் இறைவனின் கையில் ஒப்படைப்பது. இறைநம்பிக்கைகுரியவற்றை நாம் ஆராச்சி மூலம் நாம் விபரிக்கமுடியாது. நாம் நம்புகிறோம் அதனால் நாம் வாழ்வைப் பெறுகிறோம். நற்கருணையில் இறைமகன் இயேசு பிரசன்னமாயிருக்கிறார் என்பதை விசுவசிக்கிறோம். திருச்சபை அவரது மறையுடல் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இன்றைய நற்செய்தியில் இயேசு தம் சீடர்களைக் கடிந்துகொள்கிறார். காரணம் அவர்களிடம் பொறுமையும், நம்பிக்கையும் இருக்கவில்லை. அதனால் தான் அவர்கள் சிறுவனைக் குணமாக்க முடியவில்லை. எம்மிடம் நம்பிக்கையும், பொறுமையம் இல்லாவிடில் எமது விசுவாசம் அர்த்தமற்றதாகிவிடும். இன்றைய முதல் வாசகத்தில் இறைவனை நம்பாதவர்களை உள்ளத்தில் நேர்மை அற்றவர்கள் என்று கூறுவதைப் பார்க்கின்றோம். ஆகவே தான் சீரழிந்த தலை முறையினரே என்ற இயேசு கவலையோடு எம்மை நோக்கி குரலெழுப்பாதபடி பார்த்துக்கொள்வோம்.